செய்தி வெளியீடு எண்:146 நாள் :09.04.2015

## பத்திரிக்கை செய்தி

மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி மீன்வளத்துறைக்கு சொந்தமான சேத்துப்பட்டு ஏரியில் 42 கோடி ரூபாய் செலவில் பொழுதுபோக்கு தூண்டில் மீன்பிடிப்பு மற்றும் பசுமைப் பூங்கா நிறுவப்பட்டுவரும் பணிகளை மாண்புமிகு மீன்வளத் துறை அமைச்சர் கே.ஏ. ஜெயபால் அவர்கள் 08.04.2015 அன்று நேரில் ஆய்வு செய்தார்கள்.

இத்திட்டத்தில், படகு குழாம், தூண்டில் மேடை, பல அடுக்கு வாகன நிறுத்தம், பூங்கா, பொழுதுபோக்கு மையம், கடல் உணவகம், நடை மற்றும் தொடர் ஓட்டப்பாதை ஆகியவை அமைக்கும் பணிகள் மீன்வளத்துறையால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன் முதல்கட்டமாக, ஏரியை தூர்வாரி கரையை பலப்படுத்தும் பணிகள் நிறைவு பெற்றுள்ளன. ஏரியைச் சுற்றி சுற்றுச்சுவர் அமைக்கும் பணிகள், தெற்கு மற்றும் வடக்கு பகுதியில் கட்டடங்கள் கட்டும் பணிகள் நடைபெற்றுவருகின்றன. மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இக்கட்டுமான பணிகளை வரும் நவம்பர் மாதத்திற்குள் கட்டிமுடிக்கப்பட வேண்டுமெனவும், இதர சுற்றுச்சூழியல் பணிகள் மாண்புமிகு புரட்சித் தலைவி அம்மா அவர்களின் வழிகாட்டுதலின்படி இவ்வாண்டு டிசம்பர் மாதத்திற்குள் முடித்து மக்களின் பயன்பாட்டிற்கு கொண்டுவரப்பட வேண்டுமெனவும் அதற்கான பணிகள் துரிதமாக மேற்கொள்ளப்பட வேண்டுமெனவும் அறிவுருத்தினார்.

இவ்வாய்வின்போது கால்நடை பராமரிப்பு, பால்வளம் மற்றும் மீன்வளத்துறை செயலர் முனைவர் ச.விஜயகுமார், இஆப, மீன்வளத்துறை ஆணையர் (கூடுதல் பொறுப்பு) டாக்டர் திருமதி பீலா ராஜேஷ், இஆப, , தலைமைப் பொறியாளர் மற்றும் மீன்வளத்துறை அலுவலர்கள் உடனிருந்தனர்.

**வெளியீடு:**

**இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**